Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

வருகையின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 65 நீர் உமது கையை திறந்து, சகல பிராணிகளின் வாஞ்சையையும் திருப்தியாக்குகிறீர் சங்.145:16 நவம்பர் 2019 No.11

தேவனுடைய சர்வ வல்லமை

The Sovereignity of God

Arthur W. Pink

தேவனுடைய வார்த்தையின் மூலம் நமக்கு வெளிப்படுத்தப்படும் சத்தியமெல்லாம் நாம் அறிந்து கொள்வதற்கு மட்டுமல்ல, நாம் தூண்டப்படுவதற்குமாகும். வேத புத்தகம் நமக்கு அளிக்கப்பட்டது நமது சோம்பலின் ஆர்வத்தைத் தணிப்பதற்காக அல்ல, அதை வாசிப்பவர்களின் ஆத்துமா போதிக்கப்பட்டு தெளிவடைவதற்காகும். தேவனுடைய சர்வ வல்லமை என்பது தெய்வீக அரசின் அடிப்படையை விவரிக்கும் காணப்படாத தத்துவமாகும். அது தேவ பயத்திற்கேதுவானதும், நீதியான வாழ்விற்கு நம்மை வழிநடத்த அறிவிக்கப்பட்டதுமாகும். அது புரட்சி நிறைந்த உள்ளங்களைக் கட்டுப்படுத்தக்கூடியது. தேவனுடைய சர்வ வல்லமையை உண்மையாக நாம் உணரும்போது அது வேறு எதைக்காட்டிலும் நம்மைத் தாழ்மைக்கு வழிநடத்துகிறது. மேலும் நமது இருதயத்தை தேவனிடம் அர்ப்பணிக்கச் செய்கிறது. எனவே நாம் சுயசித்தத்திலிருந்து விடுபட்டு தேவ சித்தத்தை மட்டும் செய்வதில் மகிழ்ச்சியடைவோம்.

தேவனுடைய சர்வ வல்லமையைக் குறித்து நாம் பேசும்போது, அது பேச்சு மட்டுமல்ல அதனால் தேவனுடைய அரசின் அதிகாரத்தையும் நடைமுறைப்படுத்துகிறோம். தேவனுடைய சர்வ வல்லமை அவரது தேவத்துவத்தைக் காண்பிக்கிறது. அதன் ஆழமானதும் முழுமையானதுமான கருத்து ஒரே தேவனாகிய அவரது விருப்பமும் சித்தமும் நிறைவேற்றப்படுவதுமாகும். ஆக தேவனுடைய சர்வ வல்லமையை உண்மையாக உணருவது என்பது அவரது வல்லமையை நாம் நேரடியாக பார்ப்பதாகும். உயரத்திலும் உன்னதத்திலும் மகிமையுடன் வீற்றிருப்பவருக்கு முன்பாக நாம் பயத்துடன் வரவேண்டும். மும்மடங்கு பரிசுத்தமான தேவனை அவருடைய மிக அதிக மகிமையில் தரிசிக்க வேண்டும்.

இத்தகைய காட்சியின் விளைவினை அதனை அனுபவித்தவர்களின் வாழ்வினை விளக்கும் வேதபகுதிகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம். எடுத்துக்காட்டாக தானியேலைப் பாருங்கள். அவன் தான் வாழ்நாள் முழுவதும் அவரை அவருடைய தெய்வீக மகிமையின் வெளிப்பாட்டுடன் கண்டான். தமது ஊழியக்காரனாகிய அவனுக்கு மனித சாயலில் 'சணல் வஸ்திரம்' தரித்தவராகவும் தமது அரையில் 'ஊப்பாசின் தங்கக் கச்சையைக்' கட்டிக்கொண்டிருக்கிறவராகவும் தேவன் காட்சியளித்தார். இது அவருடைய பரிசுத்தத்தையும், தெய்வீக மகிமையையும் அடையாளப்படுத்துகிறது தானி.10:5,6.

அந்த தரிசனத்தால் தனக்கும் தன்னோடிருந்தவர்களுக்கும் என்ன நடந்தது என்பதை 7, 9 வசனங்களில் காணலாம்.

சர்வ வல்ல தேவனுடைய காட்சியை பெற்றுக்கொள்வதால் நமது பெலன் ஒடுங்கி, நம்மை உருவாக்கின வருக்கு முன்பாக நம்மைத் தாழ்த்த ஏதுவாகிறது. இத்தகைய உன்னதமான சர்வ வல்லவருக்கு நேராக நாம் எப்படி நடந்து கொள்வது?

1. தெய்வீக பயம் : இன்று ஏன் திரளான மக்கள் ஆவிக்குரிய மற்றும் நித்தியத் திற்குரிய காரியங்களில் கரிசனையற்றவர்களாகவும், தேவ பிரியராயிராமல் சுக போகப் பிரியர்களாகவும் இருக்கிறார்கள்? பரலோகத்தின் சவால் வரவர விசாலமாகவும், வெளிப்படையாகவும் துணிச்சலாகவுமிருக்கிறது? 'அவர்கள் கண்களுக்கு முன்பாக தேவபயமில்லை' (ரோமர் 3:18) வேத வசனத்தின் அதிகாரம் இந்நாட்களில் ஏன் குறைந்து போயிற்று? தேவனுடைய பிள்ளைகள் என்று சொல்லுகிறவர்களின் மத்தியில் அவருடைய வசனத்திற்குக் கீழ்ப்படிதல் இல்லை. வேத வசனத்தின் கருத்துக்கள் மிக எளிதாக எடுத்துக்கொள்ளப்படுகின்றன, அல்லது தள்ளி வைக்கப்படுகின்றன. தேவன் பயப்பட வேண்டியவர் என்பது வலியுறுத்தப்பட வேண்டும்.

'கர்த்தருக்குப் பயப்படுதல் ஞானத்தின் ஆரம்பம்' நீதி.1:7. தேவனுடைய மகத்துவத்தின் காட்சியால் பிரமிப்படைந்த ஆத்துமாவும் அவரது அற்புத மேன்மை, களங்கமற்ற பரிசுத்தம், பூரணமான நீதி, எதிர்க்கமுடியாத வல்லமை, முடிவற்ற கிருபை ஆகிய வற்றை தரிசித்தவர்களும் பாக்கியவான்கள். இரட்சிக்கப்படாத மக்களுக்கு மட்டுமே தேவபயம் தேவை என்று சிலர் கூறலாம். அப்படியானால் இரட்சிக்கப்பட்டு கிறிஸ்துவுக்குள் இருப்பவர்கள், தங்கள் இரட்சிப்பு நிறைவேற தாங்களே பயத்தோடும் நடுக்கத்தோடும் பிரயாசப்பட கண்டிக்கப்படுவார்களே. ஒரு காலத்தில் விசுவாசி 'தேவனுக்குப் பயப்படுகிறவன்' என்று அழைக்கப்பட்டான். இந்தப் பெயர் ஏறக்குறைய மறைந்து விட்டது. இது நமது இன்றைய நிலையைக் காண்பிக்கிறது.

தேவ பயம் என்பது, புறஜாதியார் தங்கள் தெய்வங்களுக்குப் பயப்படும் பயம் போன்றதல்ல. தீர்க்கன் ஏசாயா குறிப்பிடும் ஆசீர்வாதத்தைப் பாருங்கள். ஆனாலும் சிறுமைப்பட்டு, ஆவியில் நொறுங்குண்டு, என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப் பார்ப்பேன்' ஏசா.66:2. இதைக் குறித்து 1 பேதுரு 2:17-ல், "எல்லாரையும் கனம் பண்ணுங்கள். சகோதரரரிடத்தில் அன்பு கூருங்கள், தேவனுக்குப் பயந்திருங்கள். ராஜாவைக் கனம் பண்ணுங்கள்" என்று வாசிக்கிறோம். தேவனுடைய சர்வாதிகாரத்தை உணர்ந்து கொள்ளுவதைவிட, தேவனுக்குப் பயப்படும் பயத்தை பேணிக் காப்பாற்றுவது சிறந்தது.

2. பூரண கீழ்ப்படிதல் : தேவனை ஒரு முறை தரிசிப்பதால் நாம் எவ்வளவு சிறியவர்கள் என்பதையும், வெறுமையானவர்கள் என்பதையும் உணரலாம். அதன் அடிப்படையில் தேவனை சார்ந்து கொள்ளவும் அவருக்கு முழுமையாக நம்மை அர்ப்பணிக்கவும் தூண்டப்படுகிறோம். மேலும் தெய்வீக மகிமையின் காட்சி தேவபயத்தின் ஆவியைத் தந்து, அதன் மூலம் நாம் கீழ்ப்படிதலோடு நடக்கச் செய்கிறது. நமது இருதயங்களிலிருக்கும் தீமைகளுக்கு தெய்வீகம் எதிர்சக்தியாக செயல்படுகிறது. இயற்கையாகவே மனிதன் தனக்கும், தனது மகத்துவத்திற்கும், தன் சுயதிருப்திக்கும் முக்கியத்துவம் அளிக்கிறவன். சுருங்கக் கூறின் அவன் பெருமையும் முரட்டாட்டமும் நிறைந்தவன். ஆகவே வல்லமை நிறைந்த தேவனுடைய காட்சி ஒன்றே அவனை சரிப்படுத்தி தாழ்மைப் படுத்தக் கூடும். மனிதன் தேவனை சேவித்து அவரைப் பிரியப்படுத்த விரும்பாவிட்டால் அவன் தன்னையே சேவித்து தன்னை மட்டும் பிரியப்படுத்துவான். இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய ஒருவனாலும் கூடாது.

'கனவீனம் கீழ்ப்படியாமையைப் பிறப்பிக்கும்' என்பதற்கு எகிப்தின் பேரரசன் எடுத்துக்காட்டாயிருக்கிறான். "..... நான் இஸ்ரவேலைப் போகவிடக் கர்த்தரின் வார்த்தையை கேட்கிறதற்கு அவர் யார்? நான் கர்த்தரை அறியேன், நான் இஸ்ரவேலைப் போகவிடுவதில்லை" யாத்.5:2 என்றான் அவன். பார்வோனுடைய பார்வையில் எபிரேயரின் தேவன் வல்லமையற்றவரும்,

(4-ம் பக்கம் பார்க்க)

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : T. Peter, D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

கடிதங்கள், காணிக்கை, ஜெப விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி : வருகையின் தூதன், நியூபோர்ட் தெரு, நாகர்கோவில் - 629 001
VARUKAYIN THOOTHAN, Newport Street, Nagercoil-629 001.
Mobile: 95432 21008, 9489740295, **e-mail:**Varukayinthoothan@hotmail.com
அலுவலகம் : காலை 10.00 முதல் 1.00 வரை
மாலை 02.00 முதல் 6.00 வரை
(ஞாயிறு விடுமுறை)

இம்மாத பொன்னான சிந்தனை

நாம் பிரசங்கித்துப் பிரசங்கித்துப் பின்வாங்கிப் போகலாம்; ஆனால் ஜெபித்து, ஜெபித்து ஒரு நாளும் ஜெயமிழக்கமாட்டோம். – ரேவன் ஹில்

வாக்குத்தத்தம்

மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும், என் கிருபை உன்னைவிட்டு விலகாமலும், என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும் என்று, உன்மேல் மனதுருகுகிற கர்த்தர் சொல்லுகிறார். ஏசாயா 54:10

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

பிதாவாகிய தேவனாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

நவம்பர் மாத தூதனுக்காக என் தேவனை நன்றியோடும் தாழ்மையுடனும் துதிக்கிறேன். ஏறக்குறைய ஐந்து மாதங்களுக்குப்பின் நவம்பர் மாதம் "**எழுப்புதலுக்காக இதய கதறல்**" உயிர்மீட்சிக்காக 7 மணிநேர உபவாச ஜெபத்திற்கு அடிமை செல்ல இருக்கிறேன். சரீரத்தில் சற்று பெலவீனமாய் இருக்கும் எனக்காகவும், உடன் ஊழியர்களுக்காகவும் தயவாய் ஜெபியுங்கள்.

எழுப்புதலுக்காக இதய கதறல் சென்னை 2020
Heart cry for Revival Chennai 2020

மாதம்	தேதி	இடம்
ஜனவரி	18.01.2020 3-வது சனி	Elohim Apostolic Church Pudichur, Chennai
பெப்ரவரி	08.02.2020 2-வது சனி	Christian Assembly Mission Ayanavaram, Chennai
மார்ச்		
ஏப்ரல்		
மே		
ஜூன்		
ஜூலை		
ஆகஸ்ட்		
செப்டம்பர்	19.09.2020 3-வது சனி	Jesus Cares Assembly Anna Nagar, Chennai
அக்டோபர்		
நவம்பர்		
டிசம்பர்		

வருகையின் தூதன் ஊழியங்களின் தேவை மாதம் ரூபாய் 1 லட்சம்.
ஆண்டவர் உங்களை ஏவுகிறபடி உதாரத்துவமாய் உதவுங்கள்.

வங்கி கணக்கு :

பத்திரிகை : **VARUKAYIN THOOTHAN,** A/c. No.:431521036
Indian Bank,W.C.C. Road, Nagercoil-1
IFS Code : IDIB000N006

உபவாச ஜெபம் : **WESLEY DEVADASON,** A/c. No.: 370601000002557
I.O.B., Court Road, Nagercoil-1
IFSC Code : IOBA0000063

முன்னேற்றப்பணி : **WESLEY DEVADASON,** A/c. No.: 61822200136904
Syndicate Bank, W.C.C. Road, Nagercoil-1
IFSC Code : SYNB0006182

உபவாச ஜெபத்தைக் குறித்து ஏற்கெனவே ஆகஸ்ட் மாத தூதனில் மிகத்தெளிவாக எழுதியிருந்ததை வாசித்த இரண்டு தேவ ஊழியர்கள், தங்கள் சபை கட்டிடத்தை உபவாச ஜெபத்திற்கு திறந்து தந்திருக்கிறார்கள். **இன்னமும் 9 இடங்கள் தேவை.** இதற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

கன்னியாகுமரியிலிருந்து வெளிமாவட்டங்களுக்கு அழைத்துச் சென்ற கர்த்தர், 2015-ம் ஆண்டு சிவகாசி உபவாச ஜெபத்திற்குப்பின், மாதந்தோறும் உபவாச ஜெபங்களை நடத்தச் சொன்னார். இரண்டு ஆண்டுகள் ஜெபத்தோடு தமிழ்நாட்டுக்குள் நடத்தவும் இரக்கம் பாராட்டினார்.

2018-ம் ஆண்டு முதல் வெளிமாநிலங்களுக்குச் செல்ல வழிநடத்தப்பட்டோம். **மும்பை, மைசூர், அந்தமான், புதுடெல்லி,** திரும்பவும் வேறொரு மும்பை சபைக்கு 2019 ஏப்ரல் மாதம் சென்றோம். மேய் மாதம் **திருப்பூர்** உபவாச ஜெபத்தை முடித்த பிற்பாடு எனது சுகவீனத்தினிமித்தம் ஆப்ரேஷன் செய்யப்பட்டு, ஓய்வு எடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதை நீங்கள் அறிவீர்கள்.

தேவனுடைய பிள்ளைகள் தினந்தோறும் "**எழுப்பு தலுக்காக இதய கதறல்**" உயிர்மீட்சிக்காக 7மணி நேர உபவாச ஜெபத்திற்காக ஜெபிக்கவும், கர்த்தர் உங்களை ஏவுவாரானால் மாதந்தோறும் தாங்கவும் தயவாய் கேட்கிறேன்.

நீங்கள் ஒவ்வொரு தடவையும் காணிக்கை அனுப்பும் போது, எங்களுக்கு வசதியாக **தயவுசெய்து** கீழ்காணும் விபரங்களை கட்டாயம் எழுதுங்கள், நன்றி.

பதிவு எண் .....

பெயர் .....

முகவரி ..... பின்கோடு .....

போன்/மொபைல் .....

லூக்கா எழுதிய சுவிசேஷத்தை ஒரு தேவ மனிதர் "**தேனிட்ட பணியாரம்**" என எழுதியுள்ளார். இவ்விதம் புகழப்பட்ட லூக்கா சுவிசேஷம் முதலாம் அதிகாரத்திலிருந்து ஒரு தேவ செய்தியை எழுதி இம்மாத ஆசிரியர் கடிதத்தை நிறைவு செய்கிறேன்.

I அவர்கள் இருவரும் கர்த்தரிட்ட சகல கற்பனைகளின் படியேயும் நியமங்களின்படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள்.
லூக்கா 1:6

தேவன் சிலரைக்குறித்து இவ்விதமாக சாட்சி கொடுக்கிறார் :

1. நீதிமானென்று சாட்சி

விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான்; அதினாலே அவன் நீதிமானென்று சாட்சி பெற்றான்; அவனுடைய காணிக்கைகளைக் குறித்துத் தேவனே சாட்சி கொடுத்தார் எபிரேயர் 11:4

2. பிரியமானவனென்று சாட்சி

விசுவாசத்தினாலே ஏனோக்கு மரணத்தைக் காணாதபடிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான்; தேவன் அவனை எடுத்துக்கொண்டபடியினாலே, அவன் காணப்படாமற் போனான்; அவன் தேவனுக்குப் பிரியமானவனென்று அவன் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்னமே சாட்சி பெற்றான் எபிரேயர் 11:5.

3. பயபக்தியுள்ளவனென்று சாட்சி

விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாத வைகளைக் குறித்துத் தேவ எச்சரிப்பைப்பெற்று, பயபக்தியுள்ளவனாகி, தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டுபண்ணினான் எபிரேயர் 11:7.

4. கீழ்ப்படிதலுள்ளவனென்று சாட்சி

விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்தரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்ட போது, கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனான். எபிரேயர் 11:8.

(3-ம் பக்கம் பார்க்க)

(2-ம் பக்க தொடர்ச்சி)

5. உண்மையுள்ளவனென்று சாட்சி

மோசே தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ள வனாயிருந்ததுபோல, இவரும் தம்மை ஏற்படுத்தினவருக்கு உண்மையுள்ளவராயிருக்கிறார்.

சொல்லப்படப்போகிற காரியங்களுக்குச் சாட்சியாக, மோசே பணிவிடைக்காரனாய், அவருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான் எபிரேயர் 3:2,5.

6. தேவனுக்குப் பயப்படுகிறவனென்று சாட்சி

கர்த்தர் சாத்தானை நோக்கி : என் தாசனாகிய யோபின் மேல் கவனம் வைத்தாயோ? உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனாகிய அவனைப் போல பூமியில் ஒருவனும் இல்லை என்றார். யோபு.1:1,8.

அப்பொழுது கர்த்தருடைய தூதனானவர் வானத் திலிருந்து, ஆபிரகாமே, ஆபிரகாமே என்று கூப்பிட்டார்;

..... நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்றார் ஆதி.22:11,12.

7. கர்த்தருடைய இருதயத்திற்கு ஏற்றவனென்று சாட்சி

A man after his own heart

..... கர்த்தர் தம்முடைய இருதயத்திற்கு ஏற்ற ஒரு மனுஷனைத் தமக்குத் தேடி, அவனைக் கர்த்தர் தம்முடைய ஜனங்கள் மேல் தலைவனாயிருக்கக் கட்டளையிட்டார்;

1 சாமுவேல் 13:14

தம்முடைய தாசனாகிய தாவீதை தெரிந்துகொண்டு, ஆட்டுத் தொழுவங்களிலிருந்து அவனை எடுத்தார் சங்.78:70.

எனக்கு பிடித்தமான ஒரு சம்பவத்தை இங்கு எழுதுவது வாசகராகிய உங்களுக்கும், ஊழியருக்கும் மிகவும் பிரயோஜனமாயிருக்கும் என்று எண்ணுகிறேன்.

பின்பு ஒருநாள் எலிசா சூனேமுக்குப் போயிருக்கும் போது, அங்கேயிருந்த கனம்பொருந்திய ஒரு ஸ்திரீ அவனைப் போஜனம் பண்ண வருந்திக் கேட்டுக்கொண்டாள்; அப்படியே அவன் பயணப்பட்டு வருகிறபோதெல்லாம் போஜனம் பண்ணும்படி அங்கே வந்து தங்குவான்.

அவள் தன் புருஷனை நோக்கி : இதோ, நம்மிடத்தில் எப்போதும் வந்துபோகிற **தேவனுடைய மனுஷனாகிய இவர் பரிசுத்தவான் என்று காண்கிறேன்** என்றாள் 2 இராஜா.4:8,9.

தேவன் நம்மைக் குறித்து இவ்விதமான 7 சாட்சிகளை கூறுவாரா? இந்த 7 அனுபவங்களுக்காக ஜெபிப்பீர்களா?

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உதவி : 94897 40295
அலுவலகம் : 95432 21008

உங்கள் சகோதரன்,
வெஸ்லி தேவதாசன்
(WESLEY DEVADASON)

ஆதியும் அந்தமுமான தேவன்

God the first and the last

A.W. Tozer (1897-1963)

தேவனே முதல் முதலானவர். நிச்சயமாகவே அவரே கடைசியுமானவர்.

தேவன் தமது சிருஷ்டிப்புக்கு மேலானவரும் காலத்திற்கு அப்புறமானவருமாவார். ஆனால் சிருஷ்டிகள் பிள்ளைகளாயிருப்பதால் காலத்தோடு தொடர்புள்ள வார்த்தைகள் வசதிக்காக பயன்படுத்தப்படுகின்றன. அவர் நான் அல்பாவும் ஒமேகாவுமாயிருக்கிறேன் என்றும், நானே ஆரம்பமும் முடிவுமாயிருக்கிறேனென்றும் கூறுகிறார்.

மனிதன் தேவ திட்டத்தில் வந்தவன். ஆனால் அவன் முதல் வார்த்தையையோ கடைசி வார்த்தையையோ உச்சரிக்க அனுமதிக்கப்படவில்லை. தேவனுடையதனிப்பட்ட உரிமைகள் சிருஷ்டிகளுக்கு ஒருபோதும் விட்டுக் கொடுக்கப்படுவதில்லை.

மனிதன் தான் பிறக்கப்போகும் இடம், காலம் ஆகியவற்றை அறியமாட்டான். மனிதனோடு கலந்து ஆலோசிக்காமல் இதனை அவரே தீர்மானிக்கிறார். இந்த சிறிய மனிதன் தான் இருப்பதை உணர்ந்து ஏற்றுக்கொள்ளுகிறான். இங்குதான் சொந்த விருப்ப வாழ்வு ஆரம்பமாகிறது. இதற்கு முன்பு எதைக் குறித்தும் சொல்லக்கூடாதவன், இதற்குப் பின்பு காலத்துடன் இணைந்து தனிசுயாதீனத்தைப் பிரசுரிக்கிறான். தமது குரலை பயன்படுத்தி தான் ஒரு நாஸ்திகன் அல்லது கடவுளைக் குறித்து அறிவது கூடாதது என்ற கருத்துடையவன் என்று கூறலாம். எதைக் கூறினாலும் சிறிய மனிதனே. அது ஆரம்பத்திற்கும் இறுதிக்கும் இடையிலுள்ள வீண்பேச்சு மட்டுமே. உனக்கு முதலாவதும் கடைசியாவதும் பேச உரிமையில்லை. நீ விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் தேவ கரத்திலிருக்கிறாய் என்பதை மறவாதே.

இந்த அறிவு நமக்குத் தாழ்மையைத் தருவதுடன் உற்சாகத்தையும் தருகிறது. நாம் எத்தகைய பெலவீனர் என்பதையும், எத்தகைய தேவனை சார்ந்திருக்கிறோம் என்பதையும் உணரும்போது நம்மை நாமே தாழ்த்துவோம். எல்லாம் நம்மைவிட்டுக் கடந்து சென்றாலும் நாம் தேவனில் உறுதியாயிருக்க இந்த அறிவு நம்மை உற்சாகமூட்டும்.

ஆதாம் ஜீவாத்துமா ஆனான். ஆனால் அது அவனுடைய சொந்த விருப்பமல்ல. தேவன் சித்தங்கொண்டு அதை நிறைவேற்ற அவனை ஜீவனுள்ள மனிதனாக உருவாக்கினார். தேவன் அவனுக்கு முன்னதாகவே இருந்தார். அவன் பாவம் செய்து அவனது வாழ்வு வீழ்ச்சியடைந்த போதும் தேவன் அங்கிருந்தார். ஆதாம் ஒருவேளை இதை அறியாம லிருந்திருக்கலாம். அவன் உருவாக்கப்படுமுன்னே இருந்தவர் அவனுடைய முடிவுக்குப் பின்னும் இருக்கிறார்.

இந்த பயங்கரமும், ஆச்சரியமுமான சத்தியத்தின் ஒளியில் வாழ ஆரம்பிப்பது மிகுந்த ஞானமான செயல். தேவனே ஆதியும் அந்தமுமானவர். இந்த எண்ணம் தேசங்களை பயங்கரமானதும் இரத்த வெறி நிறைந்ததுமான தீர்மானங்களிலிருந்து விடுபட ஏதுவாயிருக்கிறது. இந்தவித மான அறிவுக்கு எதிராக அரசியல்வாதிகள் போன்றவர்கள் எழுதிய செய்திகள்தான் புரட்சிகளும், பயங்கரங்களும் ஏற்படக் காரணமாயின.

பிரயாணி ஒருவர் வனாந்தரம் ஒன்றில் கண்ட காட்சியை ஷெல்லி என்பவர் விவரிக்கிறார். கல்லினாலான சிலையின் இரு கால்களையும் அவற்றினருகில் கிடந்த சிதைந்த முகத்தையும் கண்டார் உடல் காணப்படவில்லை. அந்த சிலையைத் தாங்கியிருந்த பீடத்தில் "எனது பெயர் ஒசிமான்டியஸ், ராஜாதி ராஜா; எனது கிரியைகளை பாருங்கள் அவை நம்பிக்கையற்றவைகளாயிருக்கின்றன" என்று எழுதப்பட்டிருந்தது. இதைக் குறித்து "அந்த சிலை அழிந்து உருக்குலைந்து போனது. அதைச் சுற்றிலும் வெகுதூரத்திற்கு மண் குவியலைத் தவிர வேறொன்றுமில்லை" என்று எழுதினார்.

ஆம் ஷெல்லி சொல்வது உண்மைதான். ஆனால் அங்கு வேறொன்றுமில்லை என்பது தவறு. தேவன் அங்கு உண்டு. அவர் அங்கிருந்து மரித்துப்போன மதியீனனான அரசன் தன்னைக் குறித்துக் கூறியவைகளைக் கேட்டார். பரலோகத் தின் காற்றுகள் அந்தச் சிலையின் மீது மோதியதால் அது கீழே விழுந்து நொறுங்கியது. சுழல் காற்று அதனை மண்ணால் மூடியது. மனிதனுடைய அழிவுக்கு அது சான்றாகிறது. ஆனாலும் ஆதியும் அந்தமுமான தேவன் அங்கிருக்கிறார்.

டிசம்பர் மாத உபவாச ஜெபம்

Heart cry for Holy Spirit Revival

எழுப்புதலுக்காக இதய கதறல் 2019

(உயிர் மீட்சிக்காக 7 மணி நேர உபவாச ஜெபம்)

காலம் : ***07.12.2019*** *1-வது சனிக்கிழமை*
சமயம் : *காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை*
இடம் : **Kristhcoil LM Church,** Palliyadi - 629 169.

தொடர்பு : **Rev. M. Abraham,** Church Pastor
Mob. : 94871 04281
Bro. N. Emil Duraisingh, Secretary
Mob. : 87887558

(1-ம் பக்க தொடர்ச்சி)

பயப்படத் தேவையற்றதுமான ஒரு தேவனாயிருந்தார். அவன் தப்பான எண்ணங்கொண்டிருந்து அதற்குரிய தண்டனையையும் பெற்றான். அவனது அடங்காத ஆவிக்குக் காரணம் கனவீனம், கனவீனத்திற்குக் காரணம் அறிவீனம். அவன் தேவனுடைய மகத்துவத்தையும் அதிகாரத்தையும் அறியவில்லை.

கனவீனம் கீழ்ப்படியாமையைப் பிறப்பிக்குமென்றால், கனப்படுத்துதல் கீழ்ப்படிதலை உருவாக்குவது நிச்சயம். பரிசுத்த வேத வாக்கியங்கள் உன்னத மானவரின் வெளிப்பாடு. அவரது உள்ளத்தை நமக்குத் தொடர்புபடுத்தி அதினால் அவரது சித்தத்தை நாம் அறியச் செய்வது தேவபயத்தின் செயல் முறைக்கு முதற்படி. வேதபுத்தகம் தேவனுடைய வார்த்தை என்றும் அதிலடங்கிய சத்தியங்கள் யாவும் உன்னதமான தேவனுடையவைகள் என்றும் நாம் உணர்ந்தால் அவற்றை உதாசீனம் பண்ணவே முடியாது. அது பயங்கரமானது எனக் கண்டு கொள்வோம். வேதபுத்தகம் நமது ஆத்துமாக்களுக்காக நமது சிருஷ்டிகரால் எழுதப்பட்ட கடிதம் என்று ஏற்றுக்கொள்வோமானால் 'உமக்கு பயப்படுகிறதற்கு என் இருதயம் உமது சாட்சிகளை சாரும்படி செய்யும்' என்றும் 'உம்முடைய வார்த்தையில் என் காலடிகளை நிலைப்படுத்தும்' சங்.119:36, 133 என்றும் ஜெபிப்போம். தேவ வசனத்தின் அதிகாரத்தை நாம் பற்றிக்கொள்ளும்போது, அதிலிருந்து அதன் கட்டளையைத் தெரிந்து கொள்வது எளிதாகிவிடும். அதன் விளைவாக நாம் நம்மை முற்றிலும் அவருக்கு அர்ப்பணிக்க ஏதுவாகும்.

முழுமையான சகிப்புத்தன்மை

தேவனுடைய சர்வ வல்லமையினை உண்மையாக உணர்ந்தால் அவர் விரும்பியதை மட்டும் செய்ய ஒத்துக் கொள்வோம். வறுமையோ, வியாதியோ, குடும்பப் பிரச்சனைகளோ அல்லது இருதய வியாகுலமோ சந்தித்தாலும் பூமிக்கு தேவனாகிய நியாயாதிபதி சரியானதையே செய்வார் என்று சொல்ல முடியும். போராட்டங்கள் இருந்தாலும், கெனேசெரத்து கடலைப்பார்த்து, 'இரையாதே, அமைதலாயிரு' என்று கூறி கொந்தளிப்பை அடக்கின ஆண்டவர் நம்மோடு உண்டு. எனவே கண்ணீரோடு பரத்தை நோக்கி 'உமது சித்தம் ஆகக் கடவது' என்று சொல்லமுடியும்.

ஆழமான நன்றியுணர்வும் சந்தோஷமும்

தேவனுடைய சர்வ வல்லமையை உணர்ந்த கிறிஸ்தவன் தேவ பயம், கீழ்ப்படிதல், சகிப்புதன்மையோடு நன்றியுணர்வுமுடையவன். எனவே, 'என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி, என் முழு உள்ளமே அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி' சங்.103:1 என சங்கீதக்காரனோடு பாடுவான். பவுல் அப்போஸ்தலன், "நம்முடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற் காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரித்து" எபேசி 5:30 என்று எழுதுகிறார். நம்மில் சுயசித்தம் அதிகமாக இருப்பதால் விரும்பியது கிடைக்கும்போது நன்றியுடன் துதிப்போம். ஆனால் மாறாக நடந்துவிட்டால் என்ன செய்வோம்!

உங்கள் இருதயத்திற்கு இளைப்பாறுதல் வேண்டுமானால் நடைபெறும் எல்லா சம்பவங்களிலும் தேவனுடைய கரத்தைக் காணவேண்டும். விசுவாசம் பயிற்சிக்கப்பட வேண்டும். விசுவாசம் ஜீவிக்கும் தேவனுடைய நிச்சயமான வார்த்தையினை அஸ்திபாரமாகக் கொள்ள வேண்டும். ரோமர் 8:28-ன் படி 'அன்றியும் அவருடைய தீர்மானத்தின் படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிற தென்று அறிந்திருக்கிறோம்'. எனவே விசுவாசம் நன்றி சொல்ல ஏதுவாயிருக்கும். விசுவாசம் கிரியை செய்யும் போது கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருப்போம் பிலி.4:4.

தொழுது ஆராதித்தல்

உண்மையான தொழுகை தேவனுடைய மிகமிக உயர்வான மகத்துவம் மற்றும் சர்வ வல்லமையை உணர்ந்து, வேறு எந்தப் பாதபடியிலும் பணியாத ஒன்றாகும். தெய்வீக அரசராகிய தேவனுடைய சமூகத்தில் அவரது சிங்காசனத்திற்கு முன்பாக சேராபீன்கள் கூட தங்கள் முகங்களை மூடிக்கொள்கின்றன.

தெய்வீக சர்வாதிகாரம் ஒரு கொடுங்கோல் மன்னனைப் போன்ற தல்ல. அது அளவில்லா ஞானமும் நன்மைகளும் நிரம்பிய ஒருவரின் இன்பமான கிரியைகள் அடங்கியது. அவர் எல்லையற்ற ஞானமுள்ளவராயிருப்பதால் ஒருபோதும் தவறு செய்ய முடியாது. அவர் அளவற்ற நீதியுடையவராயிருப்பதால் அவர் தவறு செய்ய மாட்டார். இந்த சத்தியம் விலையேறப் பெற்றது. தேவனுடைய சித்தம் தடுக்க முடியாததும், திருப்பமுடியாததுமாகும். இதை எண்ணும்போது நான் பயப்படுகிறேன். தேவன் நன்மையானதை மட்டும் செய்வார் என்பதை உணரும் போது இருதயம் மகிழ்ந்து பூரிக்கிறதல்லவா!

எல்லாவற்றையும் சோதித்து பாருங்கள்

Prove all things

J.C. Ryle (1816-1900)

"எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள்" 1 தெச.5:21. பவுலின் மூலமாக தேவ ஆவியானவர் நமக்குக் கூறும் இந்த ஆலோசனையில் இரு பெரிய கருத்துக்கள் காணப்படுகின்றன.

1. **தனிப்பட்ட தீர்ப்புகள், உரிமை, கடமை மற்றும் தேவை ஆகியவற்றை சோதித்துப் பாருங்கள்.**
2. **சத்தியத்தை உறுதியாகப் பற்றிக்கொள்வதால் நமது தனிப்பட்ட தீர்ப்புக்கான உரிமை கடமை தேவை போன்றவற்றில் நலமானதை மட்டும் பிடித்துக் கொள்ளுங்கள்.**

தனிப்பட்ட தீர்ப்புக்கான உரிமை, கடமை மற்றும் தேவை

தனிப்பட்ட தீர்ப்புக்கான உரிமை என்று சொல்லும்போது கிறிஸ்தவன் தேவவசனத்தின் அடிப்படையில் தீர்ப்பு செய்ய உரிமையுடையவன் என்பது பொருள். அவனுக்கு முன்பாக எந்த மார்க்க சத்தியமோ, தேவனுடைய சத்தியமோ வேறு எதுவுமோ வைக்கப்படலாம்.

கடமை என்று சொல்லும்போது மேற்கூறிய உரிமையை நாம் பயன்படுத்த எதிர்பார்க்கப்படுகிறோம். மனித வார்த்தைகளை தேவனுடைய வெளிப்பாட்டுடன் ஒப்பிட்டுப்பார்த்து தான் தவறான போதனைக்கு உட்படவில்லை என்ற நிச்சயத்துடன் கடமை ஆற்ற வேண்டும்.

தேவை என்பது கிறிஸ்தவனுக்கு தனிப்பட்ட தீர்ப்பு அல்லது நிதானிப்பு தேவை. தனது ஆத்துமாவை நேசித்து, தனது உரிமையை பயிற்சித்து, கடமையை நிறைவேற்றும்போது தனிப்பட்ட நிதானிப்பு உதாசீனம் செய்யப்படுவதால் சபைக்குள் ஏராளமான தீமைகள் நுழைகின்றன.

இந்த மூன்று காரியங்களையும் குறித்து அப்போஸ்தலன் எல்லாவற்றையும் சோதித்துப் பாருங்கள் என்று அடக்கிக் கூறுகிறார். அவருடைய வார்த்தைகளை கவனியுங்கள். அவை போதனைகளும் கருத்துக்களும் நிறைந்தவை.

அவரே ஸ்தாபித்த தெசலோனிக்கேயா சபைக்குத்தான் அவர் இப்படி எழுதுகிறார். ஆவியானவரால் தூண்டப்பட்ட அவர் முதிர்ச்சியடையாத புதிய கிறிஸ்தவர்களுக்கு இப்படி எழுதுகிறார். பேர்க்கிறிஸ்தவர்களும் அடங்கிய பட்டணத்தின் சபை முழுவதற்கும் இப்படி எழுதுகிறார். 20-ம் வசனத்தில் தீர்க்கதரிசனங்களை அற்பமாய் எண்ணக்கூடாது. அவற்றையும் சோதித்துப் பார்க்கக் கூறுகிறார்.

எந்த அப்போஸ்தலனோ, சுவிசேஷகனோ, போதகரோ, அத்தியட்சரோ, ஊழியக்காரரோ சொல்லுவதை விசுவாசிகள் அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லாமல் எல்லாவற்றையும் சோதித்துப் பாருங்கள் என்கிறார்.

வேதவசனங்களின் அடிப்படையில்தான் அவைகளை சோதித்துப் பார்க்க வேண்டும். அனைத்து தத்துவங்கள், பிரசங்கங்கள் எழுதப்பட்டவைகள் அபிப்பிராயங்கள் நடைமுறைகள் யாவும் இவ்வாறு சோதித்துப் பார்க்கப்பட வேண்டும். வேதவசனம் தராசாக பயன்படுத்தப்பட வேண்டும். வேத வசனமாகிய அக்கினிக்கு நிலைத்து நிற்பதனை மட்டுமே ஏற்றுக்கொண்டு, பிடித்துக்கொண்டு விசுவாசித்துக் கீழ்ப்படியுங்கள். இல்லாவிட்டால் அதை அகற்றிவிடுங்கள்.

(4-ம் பக்க தொடர்ச்சி)

புதிய ஏற்பாட்டின் நியதி

ஆண்டவராகிய இயேசு மலைப் பிரசங்கத்தில் "கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக் கொண்டு உங்களிடத்தில் வருவார்கள், உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள், அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்" மத்.7:15,16. தனிப்பட்ட முறையில் அவர்களைத் தீர்க்க முடியாது. கனிகளை பார்த்து மட்டுமே அவர்களை அறிந்து கொள்ள முடியும்.

அப்போஸ்தலர்களின் நடபடிகளில் பெரோயா மக்களைக் குறித்து அவர்களது வழக்கத்தைக் குறிப்பிடுகிறார். பவுல் அவர்களிடம் வந்தபோது அவர் பிரசங்கித்தவைகளை மட்டும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. "காரியங்கள் இப்படி இருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்தார்கள்" அப்.17:11, 12.

1 கொரி.10:15-ல் "உங்களை புத்திமான்களென்று எண்ணிப் பேசுகிறேன்; நான் சொல்லுகிறதை நிதானித்துப் பாருங்கள்" என்று பவுல் அறிவுறுத்துகிறார். லௌகீக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும் ஒருவனும் உங்களைக் கொள்ளை கொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் கொலோ.2:8." நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்" 1 யோவா 1:1. ஒருவன் ..... இந்த உபதேசத்தைக் கொண்டு வராமலிருந்தால் அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள் 2 யோவா.10.

சத்தியத்தின் மீது நமது கடமையும் அதை உறுதியாகப் பிடித்துக் கொள்வதின் தேவையும்

'நலமானதைப் பற்றிக் கொள்ளுங்கள்' என்று அவர் வலியுறுத்துகிறார். நீங்கள் சத்தியத்தைக் கண்டு கொண்டு அது கிறிஸ்துவின் சத்தியம் என்பதில் திருப்திகொண்டால் அதை உறுதியாகப் பற்றிக்கொண்டு ஒருபோதும் விடாமல் இருதயத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.

இந்த புத்திமதி எப்போதும் நமக்கு அவசியம். மிக நல்ல ஸ்தாபனங்களும் கெட்டுப்போக வாய்ப்புகள் உண்டு. நாம் இன்று காணும் கிறிஸ்துவின் சபையும் இதற்கு விதிவிலக்கல்ல. ஏனெனில் இவற்றில் தவறுசெய்யும் மனிதர்கள் உண்டு. எனவே அழிவுக்குரியது புளித்தமா என்ற தீமை சபைகளில் பிரவேசிப்பதுண்டு. அப்போஸ்தலர் காலத்திலும் இது நடந்தது. கொரிந்து சபையிலும் எபேசு, கலாத்தியா சபைகளிலும் தீமை காணப்பட்டது. இவையெல்லாம் கடைசி காலத்திற்கு எச்சரிக்கையாயிருக்கின்றன. எனவே சபைகள் 'நலமானதைப் பற்றிக் கொள்ளுங்கள்' என்ற அறிவுரை மறக்கப்படக்கூடாது.

பல சபைகள் இதை மறந்து விட்டபடியால் விழுந்துவிட்டன. ஊழியக்காரரும் சபை மக்களும் சாத்தான் பொய்யான உபதேசங்களை சபைக்குள் நுழைக்கப் பிரயாசப்படுகிறான் என்பதை மறந்துவிட்டனர். அவன் ஒளியின் தூதனாக மாறுவேடம் போடுவான். இருளை வெளிச்சமாகவும், வெளிச்சத்தை இருளாகவும் அவன் காண்பிப்பான். சத்தியத்தை பொய்யாகவும், பொய்யை சத்தியமாகவும் அவன் வெளிப்படுத்துவான். கிறிஸ்தவத்தை அழிக்க முடியாவிட்டாலும் அதைக் கெடுக்க முயற்சிப்பான். தெய்வ பயத்தின் சாயலைத் தடுக்க முடியாவிட்டால் சபையின் வல்லமையினைத் திருட முயற்சிப்பான். இவைகளை மறக்கிற எந்த சபையும் பாதுகாவலாயிருக்க முடியாது. 'எனவே நலமானதையே பற்றிக் கொண்டிருங்கள்.'

நலமானதை பற்றிக்கொள்ள வேண்டுமானால் கிறிஸ்துவின் சுத்த சுவிசேஷத்திற்கு எதிரான தத்துவங்களை நாம் அனுமதிக்கக்கூடாது. ஒவ்வொரு நாளும் சிறிது சிறிதாக நச்சுப்பொருளை உண்ண எவரேனும் விரும்புவார்களா? அப்.20:26-ல் கூறியிருக்கிறபடி எந்த மனுஷனும் தேவனுடைய ஆலோசனையை அல்லது கிறிஸ்து, பாவம், தூய்மை, மீட்பு, மறுபிறப்பு ஆகிய வற்றைப் போதியாமல் வேறு எதையும் பிரசங்கித்ததால் "..... அறிவைத் தரும் வார்த்தைகளை விட்டு விலகச்செய்யும் போதகங்களை நீ கேளாதே" நீதி.19:27 என்று எச்சரிக்கப்படுகிறோம்.

வசனத்தை அறிகிற அறிவு

எல்லாவற்றையும் சோதித்துப் பார்க்க தேவனுடைய வசனத்தைக் குறித்த நல்ல அறிவினைப் பெற்றுக் கொள்ளுங்கள். வேத வசனங்களை ஒழுங்காகவும் கிரமமாகவும் வாசியுங்கள். வேத புத்தகத்தோடு நெருங்கிப் பழகுங்கள். உங்களுக்கு முன்னால் வைக்கப்படும் மார்க்க சத்தியங்களை வேதவசனங்களைக் கொண்டு நிரூபியுங்கள். வேத வசனத்தின் சிறந்த அறிவு வேண்டும். அதை மனதில் பதிக்க வேண்டும். தினமும் வாசித்தால் மட்டுமே மனதில் பதிக்க முடியும். பிசாசு வேத வசனங்களை மேற்கோள் காட்டக்கூடியவன். அவ்வாறு அவன் இயேசுவை சோதித்தான். எனவே வேத வசனம் தவறாகக் கூறப்படும்போது 'இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறதே' என்று மறுமொழி கூறும் அளவுக்கு வேதவசனம் கற்றுக்கொள்ளப்பட வேண்டும். வேத புத்தகத்தை உதாசீனம் பண்ணினால் தவறான போதனைகளுக்கு இரையாவதை நாம் தடுக்க முடியாது. எனவே விழிப்புடனிருப்போம்.

எல்லாப் பாவமும் தேவனுக்கு எதிரானதே

All Sin is against God

Richard Owen Roberts

தாவீது அரசன் தான் பாவம் செய்ததை எண்ணி ஆழமான பாவ உணர்வடைந்தபோது, கதறி அழுது பாவ அறிக்கை செய்ததை, 51-ம் சங்கீதத்தில் படிக்கிறோம். 'தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ்செய்து பொல்லாங்கானதை நடப்பித்தேன்; நீர் பேசும் போது உம்முடைய நீதி விளங்கவும் நீர் நியாயந்தீர்க்கும் போது உம்முடைய பரிசுத்தம் விளங்கவும் இதை அறிக்கையிடுகிறேன்' சங்.51:4. இந்த வார்த்தைகளை ஆழமாக சிந்திக்கும்போது இவை ஆச்சரியத்திலும் ஆச்சரியமானது. தாவீது தனக்கு எதிராகவும், தான் அரசாண்ட இஸ்ரவேல் மக்களுக்கு எதிராகவும், உரியாவுக்கு எதிராகவும், அவனது மனைவி பத்சேபாளுக்கு எதிராகவும் பாவம் செய்தான் என்று நாம் சொல்லலாம். ஆனால் அவன் தான் செய்த பெரிய தவறு அவனது மனச்சாட்சியை உடைத்தபோது தான் செய்த பாவம் தேவனுக்கு எதிரானது எனக் கண்டான்.

எந்தப் பாவத்தினாலும் ஏற்படும் தவறும் தேவனுக்கெதிரானது என்ற உண்மை உங்களுக்குத் தெரியுமா? மனிதன் சிறியதென்றோ, பெரியதென்றோ சொல்லுகிற சகல பாவமும் தேவனுக்கெதிரானதுதான். அப்படி நாம் உணருவோமானால், போத்திப்பாரின் மனைவியின் சோதனையை விட்டு யோசேப்பு ஓடியபோது அந்தத் தீமையைக் குறித்து, இப்படியிருக்க நான் இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்வது எப்படி? ஆதி.39:9 என்று சொன்னது போல கூறி தப்பி ஓடுவோம்.

ஏமாந்து போன மக்கள் பேசுவதுபோல உங்கள் பாவங்கள் மிகச் சிறியவைதான் என்கிறீர்களா? தாவீதைப் போல நான் பாவஞ்செய்யவில்லை. ஏதோ ஒரு சிறிய கட்டளையை மட்டுமே மீறிவிட்டேன் என்கிறோமா? ஒருவன் நியாயப் பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும் ஒன்றில் தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான் யாக்.2:10. ஒரு கட்டளையின் ஒரு சிறு பகுதியை நீங்கள் மீறினாலும், உங்கள் மீறுதல் அனைத்து கட்டளைகளையும் மீறுவதற்கு இணையாகும்.

இது நியாயமல்ல, இதை நான் ஒத்துக்கொள்ள முடியாது என்றால் நீங்கள் வஞ்சிக்கப்பட்டுவிட்டீர்கள் என்பதுதான் பொருள். விளையாட்டுகளிலும், போட்டிகளிலும் விதிகளுண்டு. இவைகளில் சிறு தவறு இழைக்கப்பட்டாலும் அது இழப்பினை ஏற்படுத்தும். மனிதனை உண்டுபண்ணிய தேவன் விளையாட்டுகளுக்குச் சட்டங்களை ஏற்படுத்தியவர்களைவிட மேலானவர். மிகச் சிறிய பாவத்தால் தேவனுடைய பிரமாணம் மீறப்பட்டாலும் அது உங்களை நிரந்தரமான பாவியாக்கிவிடும்.

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்க தொடர்ச்சி)

தேவன் நமது நிலைப்பாட்டினை ஒழுங்குபடுத்துகிறவர்

நீங்கள் தோற்றமளிக்கிறபடி சிறிய பாவியா? நீங்கள் ஒத்துக்கொண்டிருப்பதைவிட செய்த பாவம் கொடியதும் எண்ணிக்கையில் அதிகமாகவும் இல்லையா? இன்னொருவரோடு ஒப்பிட்டு உங்கள் பாவம் சிறியது என்கிறீர்களா? குடும்பத்தை ஒழுங்காக நடத்துகிற ஒருவன், குடிவெறியால் குடும்பத்தைச் சீரழிக்கும் ஒருவனுடன் தன்னை ஒப்பிட்டு தான் சிறந்தவன் என்று கூறலாம். ஆனால் தன்னை ஆண்டவராகிய இயேசுவுடன் ஒப்பிட்டால் எந்த அளவிலிருப்பான்? தேவனுடைய அவதாரமாக இவ்வுலகில் வந்து வாழ்ந்தவர் அவர். அவரது வாழ்வை மாதிரியாக வைத்து நாம் அப்படி வாழவேண்டும் என்ற எதிர்பார்ப்புடனிருக்கிறார். அவருடன் மட்டுமே நாம் நம்மை ஒப்பிட்டுப் பார்த்து நம்மைச் சரிபண்ணிக்கொள்ள வேண்டும்.

நீங்கள் உங்கள் பாவங்களை குறித்து, அவை சிறியவை, உங்களுக்கு அல்லது மக்களுக்கு மட்டுமே விரோதமானது, அடிக்கடி அதனை செய்வதில்லை என்று எண்ணிக்கொண்டிருந்தால் அதின் விளைவையும் தாக்கத்தையும் உங்கள் மேலும், பிறர் மேலும் மட்டுமே ஏற்படுத்துகிறீர்கள். இப்படிப்பட்டவர்கள் 'நான் இதைச் செய்வதால் யாருக்குத் தீமை செய்கிறேன்?' என்று கேட்பார்கள். அவர்கள் யாருக்கும் தீமை செய்யாதது போல சமாளித்தாலும் அது தேவனுக்கு விரோதமான பாவமே.

இவ்வாறு நாம் செய்யும் பாவங்களை மனிதரோடு ஒப்பிடாமல், தேவன் நமக்குத் தந்த பிரமாணங்களின் தராசில் அளவிட வேண்டும். சரி தவறு என்பதைப் பிறரை சந்தோஷப்படுத்துகிறோமா? அல்லது துக்கப்படுத்துகிறோமா? என்ற கண்ணோட்டத்தில் பார்க்கப்பட வேண்டும். நாம் செய்யும் அனைத்துப் பாவங்களும் தேவனுக்கெதிராயிருப்பதால் தேவனிடம் மன்னிப்பு கோரப்பட வேண்டும்.

தேவன்தான் சட்டதிட்டங்களைத் தருகிறவர். அவை கடைபிடிக்கப்படவேண்டிய அளவையும் அவரே தருகிறார். அவை திட்டமானவை. அவற்றை மீறவோ, மாற்றவோ நமக்கு உரிமை உண்டு. இவ்வாறு மீறுதலால் வரும் பாவங்கள் அவருக்கெதிரானவைகளாயிருப்பதால் அவை பொல்லாதவை. அவற்றிலிருந்து உடனே மனந்திரும்புவது அவசியம்.

பாவமான எண்ணங்கள்

இன்னும் நீங்கள் பாவத்தின் கொடுமையை ஒத்துக்கொள்ளாமலிருக்கலாம். கொலை, விபச்சாரம் போன்ற பலரது பாவங்கள் உங்களிலில்லை என்பதால் பிரச்சனையே இல்லை என்ற எண்ணம் வேண்டாம். பாவத்தின் நினைவு கூட அதைச் செய்வதற்கு இணையானது என்று அறிவீர்களா? மத்.5:21, 22, 27, 28 ஆகிய வசனங்களைப் படித்துப் பாருங்கள். இப்போது நான் என் சகோதரனிடம் கோபம் கொண்டதில்லை. இச்சையோடு யாரையும் பார்த்ததில்லை என்று தைரியமாக உங்களால் கூற முடியுமா?

செய்யத் தவறியவைகள்

நீங்கள் செய்ய வேண்டிய எத்தனை காரியங்களை செய்யத் தவறியிருக்கிறீர்கள்? கற்பனைகளை மீறுவது மட்டுமல்ல, செய்ய வேண்டியவைகளைச் செய்யாமலிருப்பதும் பாவமே. வனாந்தரத்தில் இயேசு பிசாசினால் சோதிக்கப்பட்டபோது, அவன் அவரை உயர்ந்த மலையின் மீது கொண்டு சென்று உலகத்தின் ராஜ்யங்களையும், அவற்றின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து, 'நீர் எனக்கு முன்பாக சாஷ்டாங்கமாகப் பணிந்து வணங்கினால் இவைகளையெல்லாம் தருவேன்' என்றபோது இயேசு கூறியதில், 'அப்பாலே போ சாத்தானே, உன் தேவனாகிய கர்த்தர் ஒருவரையே பணிந்துகொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே' என்று பதிலளித்தார். தேவனைத் தவிர எவரையும், சிறிது நேரமாயினும் தொழுது சேவித்ததுண்டா? என் சிறு வயதிலிருந்தே இதுவரை அப்படிச் செய்ததில்லை என்று திட்டமாகக் கூறமுடியுமா?

அனைத்து கட்டளைகளையும் சுருக்கி ஆண்டவர் மத்.22:37-39 வசனங்களில் தந்திருக்கிறார். இவ்வித மாக தேவனையும், பிறரையும் நேசிக்கிறீர்களா? வரும் நாட்களில் தேவனை உங்களைவிடவும், உங்கள் விருப்பங்களை விடவும், உங்கள் உடைமைகளை விடவும் அதிகமாக நேசிக்க முயற்சிப்பீர்களா? உங்கள் அயலாரை உங்களைப் போல் நேசிக்கிறீர்களா? உங்கள் நல்வாழ்வை நீங்கள் விரும்புவது போல, பிறருடைய நல் வாழ்வையும் விரும்புகிறீர்களா? இந்த இரு கற்பனைகளையும் நீங்கள் கைக்கொள்ள முடியாவிட்டால் உங்கள் பாவங்கள் பெரியவைகளல்ல என்று எப்படி எண்ணமுடியும்?

நீங்கள் உங்கள் பாவத்தின் கொடூரத்தையும் அதன் ஆழம், விஸ்தாரம் ஆகியவற்றைக் குறித்த கவலையற்றிருப்பீர்களானால் உங்கள் நித்திய வாழ்வுக்கு நம்பிக்கை எது? வாழ்க்கையின் எந்தக் கட்டத்திலாகிலும் தேவனை முழு மனதோடு நேசிக்காமலிருந்ததுண்டானால் நீங்கள் மிகப் பெரிய பாவம் செய்திருக்கிறீர்கள். தேவன் உங்கள் வாழ்வில் மிகவும் நல்லவராக இருந்திருக்கிறார். ஆசீர்வாதங்களுக்கு மேலான ஆசீர்வாதங்கள் உங்கள்மேல் பொழியப்பட்டுள்ளன. தொடர்ந்து தேவனை ஆராதித்து அவருக்கு நன்றி செலுத்துகிறீர்களா? அல்லாவிட்டால் பெருமையின் ஆவி உங்களை நன்றி உணர்வற்றவர்களாக்குகிறதா?

கிறிஸ்துவின் மரணத்திற்குப் பொறுப்பு

அவரை விசுவாசிக்காத பாவிகள் அனைவரும் கிறிஸ்துவின் மரணத்திற்குப் பொறுப்புள்ளவர்கள். உங்கள் பாவங்கள் தான் அவர் சிலுவையிலறையப்பட காரணமாயிருந்தது. உங்கள் பொல்லாப்புகளும், தவறுகளும் அவர் சிலுவைப்பாடுகளை ஏற்று தமது இரத்தத்தை சிந்த ஏதுவாயிற்று. உங்கள் பாவங்கள் அத்தனை கொடிதாயிருந்தது. எனவேதான் தேவன் தமது ஒரே குமாரனை உங்களுக்குப் பதிலாகப் பாடுபட அனுமதித்தார். இவையெல்லாவற்றையும் கவனித்தும், நான் சிறிய பாவிதான் எனக்கு மனந்திரும்புதல் தேவையில்லை என்கிறோமா?

வேத அடிப்படையிலான உத்தம மனந்திரும்புதல்

ஒருவன் தனது பாவத்தின் அகோரத்தைக் கண்டு, தனக்குப் பதிலாக இயேசு தேவாட்டுக்குட்டியாக மரித்தார் என்பதை உணரும்போது இதற்கு ஈடாகத் தான் அவருக்கு என்ன செய்யமுடியும்? என தன்னையே கேட்பான். நன்றி என்று சொன்னால் மட்டும் போதுமா? ஒரு பொருளைக் கொடுத்தோ, தர்ம சிந்தையுடன் காலத்தையும் பணத்தையும் செலவு செய்தால் போதுமா? அல்லவே அல்ல. மரணத்திற்கு பாத்திரரான உங்களுக்குப் பதிலாக அவர் மரித்தார். பாவம் அறியாத அவர் உங்களுக்காகப் பாவமானார். உங்கள் பாவங்களையும் பாடுகளையும் ஏற்று ஜீவனைக் கொடுத்தார். தேவ குமாரனாகிய அவர் நரகத்திற்குப் பாத்திரமான பொல்லாத மனுஷருக்காக தம்மை அர்ப்பணித்தார். இதற்குப் பதிலாக நமது ஜீவனை அவருக்காக அர்ப்பணிப்பது ஒன்றே சரியான பதில்.

மனந்திரும்புதல் ஒரு அபிப்பிராயமல்ல. செத்த கிரியைகளிலிருந்து திரும்ப வேண்டும். வேத அடிப்படையிலான இந்த திரும்புதலில் தேவன் பிரியப்படுகிறார்.

இந்தப் பெரிய சத்தியம் எழுப்புதலில் வற்புறுத்தப்பட வேண்டும். மனந்திரும்புதலில்லாவிட்டால் கிறிஸ்துவின் சபையாகிய சரீரம் பறந்து செல்வதற்குப் பதிலாக குந்திக் குந்தி நடக்கும். வேகமாகச் செல்வதற்குப் பதிலாக ஊர்ந்து செல்லும். தேவ ஆவியின் ஒவ்வொரு அசைவிலும் அது சிறகடித்து உயரமாகப் பறக்கும்.

அறிவிப்பு

வருகையின் தூதன் பத்திரிகை வருட சந்தா ரூபாய் 500.00.

தபால் சலுகை இல்லாதபடியால் வருகையின் தூதன் ஊழியத்தை உதாரத்துவமாய் தாங்குங்கள்

நிர்வாக வசதிக்காக

நீங்கள் எங்களை தொடர்பு கொள்ளும் போது ஒவ்வொரு தடவையும் கீழ்காணும் விபரங்களை தயவாய் தெரிவியுங்கள், நன்றி.

பதிவு எண் :
பெயர் :
முகவரி :
பின்கோடு :
தொலைபேசி :
அலைபேசி :

கிழக்கு ஐரோப்பாவுக்கு அப்போஸ்தலனான பேசில் மலாஃப்

Basil Malof : Apostle to Eastern Europe (Part-3)

பகுதி-3

James A. Stewart (1910-1975)

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் லாட்வியாவைச் சேர்ந்த பேஸில் மலாப்ஃ அடிமைகள் மத்தியில் சுவிசேஷத்தை அறிவிக்க அழைக்கப்பட்டார். மாஸ்கோவில் பணியாற்றிக் கொண்டிருக்கும்போது பாரம்பரிய சபையால் எதிர்ப்பு வந்தது. எனவே ரஷியாவிலிருந்து வாழ்நாள் முழுவதும் வெளியேற்றப்பட்டார். அவ்வேளையில் முதலாம் உலகயுத்தம் ஆரம்பமானது. ஆயிரக்கணக்கான ரஷிய வீரர்கள் ஜெர்மனி சிறை முகாம்களுக்கு அனுப்பப்பட்டனர். ரஷிய போர்வீரர் களின் அவல நிலையைக் கண்ட மலாஃப் ஐக்கிய நாடுகளுக்குச் சென்று சிறை பிடிக்கப்பட்ட தனது நாட்டு மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க முயற்சித்தார். விரைவில் ஏராளமான பணம் திரட்டப் பட்டது. ரஷிய மொழியில் துண்டு பிரதிகளும், புதிய ஏற்பாடுகளும் ஜெர்மனியிலுள்ள ரஷிய பாஷை பேசும் ஊழியர்களுக்கு அனுப்பப்பட்டது. இவைகள் மூலம் சுமார் 30,000 போர்க் கைதிகள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட னர். 1918-ல் வெர்ஸைல்ஸ் உடன் படிக்கையால் போர் நின்றது. போர்க் கைதிகள் சொந்த நாடு வந்தனர்.

ஒரு மிஷினெறியை பிசாசு ரஷியாவிலிருந்து துரத்தினான். அவ ருக்குப் பதிலாக ஆண்டவர் பலநூறு மிஷனெறிகளை அனுப்பினார். சத்துரு தான் மிக நன்றாயிருப்பதாக எண்ணும் போது தேவன் அவனை மிகவும் தாழ்த்தி விடுகிறார். பிசாசினுடைய கல்வாரிகள் தேவனுடைய உயிர்த்தெழுதல்களின் விளைவை ஏற்படுத்தும்.

மலாஃப் என்னிடம் (ஜேம்ஸ் ஸ்டுவர்ட்) அவர் பெற்ற ஒரு கடிதத்தின் மூலம் திரும்பி வந்த போர்க்கைதிகளின் சாட்சி மூலமாக 800-க்கும் அதிகமான பாப்திஸ்து சபைகள் நிறுவப்பட்டதாக அறிந்ததாகக் கூறினார். இக்கடிதம் ரஷியாவிலிருந்து தென்மகாணமாகிய ஹார்கோஃபிலிருந்து எழுதப்பட்டதாகும்.

தேசம் முழுவதும் வல்லமையான எழுப்புதல் ஏற்பட்டது. லூனா சார்க்ஸி என்ற இடத்திலுள்ள கம்யூனிஸ்டு கல்வித்துறைத் தலைவர் இப்புரட்சிக்குப் பின் சுவிசேஷகர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக வளர்ந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். ஒரு போதகர் நாடு கடத்தப்பட்டதின் மூலம் சுவிசேஷம் வெற்றிபெற்றது! தேவன் அப்போத கரையும் அவரது பணியையும் கனப் படுத்தினார். மலாஃப் தமது பாணியில் கூறும்போது "தேவன் கம்யூனிஸம் வருவதை முன்பே கண்டுகொண்டார். நல்ல சமயத்தில் அதற்கு எதிராக ஒரு அரணை ஏற்படுத்தி யுத்தத்தின் மூலம் ஆயிரக்கணக்கான சிறைக்கைதிகளை 'தப்புவிக்கப்பட்ட கொள்ளிகளாக' பயன்படுத்தி தேவனுடைய சபையாகிய தோட்டத்தில் நீதியின் கனிகளைத் தரும் மரங்களாக மாற்றினார்" என்று குறிப்பிடுகிறார்.

சுவிசேஷத்தைப் பரப்ப முடி யாத ரஷியா இன்று சுலபமான களமாக மாறிவிட்டது. அன்றைய நிலையை அறிந்த மக்கள் ஒரு சுவிசேஷ கூடுகை அங்கு நடத்துவதற்கு அனுமதி வாங்கு வது எவ்வளவு கடினம் என்று அறிவார் கள். சட்டப்படி அனுமதியோ அறைக ளோ கிடைப்பதில்லை. அப்படியே அறை கிடைத்துவிட்டாலும் கிராம தலைவன் மக்களை வரவிடாமல் தடை பண்ணுவான். வாசலில் நின்று கொண்டு பெயர்களை எழுதுவான்.

மனந்திரும்பிய கைதி திரும்பி வருதல்

"அவன் நீண்ட காலமாகத் திரும்பி வரவில்லை. அவன் தன் நாட்டிற் காக போர்செய்து, நீண்ட கால சிறைத் தண்டனை பெற்றவன். இப்போது ஒரு வீரனாகத் திரும்புகிறான். ரஷியப்படை யின் மிகப்பெரிய கௌரவ சின்னம் அவன் மார்பில் பதிக்கப்பட்டிருக்கிறது. அனைவரும் அவனை வரவேற்கின்றனர். குடும்பத்தோடு இணைவதால் மனைவி பிள்ளைகளோடு ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறான்"

அவனது வரவைக் குறித்து செய்தி அறிந்த கிராமம் கிளர்ச்சியடை கிறது. அவனது சொந்த குடிசை அயலகத்தாராலும், பிறராலும் விரைவில் சூழப்படுகிறது. சூடான பானம் வினியோகிக்கப்படுகிறது. அனைவரும் அவனுடைய அனுபவங்களை விசாரிக் கின்றனர். ஜெர்மனியில் அவன் எங்கு வைக்கப்பட்டிருந்தான், எவைகளை பார்த்தான், எவைகளைக் கற்றுக் கொண்டான் என்ற கேள்விகள் எழுப்பப் பட்டன. அவை பதிலளித்த போது அனைவரும் வியப்புடன் கேட்டனர்.

இறுதியில் அவன் எதையோ மிக முக்கியமாகக் கூறப்போவதை அவர்கள் கவனித்தனர். அவன் தனது கரத்தை சட்டைப் பைக்குள் இட்டு ஒரு புதிய ஏற்பாட்டை மிகவும் மரியாதையுடன் எடுத்து, அதை உயர்த்திப்பிடித்துக் கொண்டு இவ்வாறு கூறுகிறான்:

"நீங்கள் யாவரும் நான் ஒரு துஷ்டன் என்பதை அறிவீர்கள். நான் குடித்து வெறித்து மக்களுடன் சண்டை யிட்டவன். எனது மனைவி மக்களும் குடிப்பழக்கத்தால் செய்த தீமைகளை அறிவீர்கள். இப்போது இயேசுக் கிறிஸ்து என் சொந்த இரட்சகராயிருக்கிறார். பாவத்தின் வல்லமையிலிருந்து விடுவித்து புது சிருஷ்டியாக்கிவிட்டார். இனிமேல் எவரையும் நான் துன்பப்படுத்துவதில்லை."

அதைக் கேட்ட மனைவி, பிள் ளைகள் அயலகத்தார் அவன் அடைந் திருந்த மாற்றத்தைக் கட்டனர். அவன் சொல்வது உண்மை என்று கண்டனர். தேவ வசனத்தைத் திறந்து ஒரு பகுதியை வாசித்து தன்னால் இயன்றபடி விவரிக்கிறான். அனைவரையும் முழங் காற்படியிடச் செய்து ஜெபிக்கிறான்.

இத்தகைய சம்பவங்கள் நூற்றுக் கணக்கான கிராமங்களில் நடை பெற்றன. இதுவரை சுவிசேஷம் கேட்கப் படாத கிராமங்களும், பட்டணங்களும் இந்த அனுபவத்தைப் பெற்றன. எனவே மலாஃப் மிகுந்த உணர்ச்சியோடு

தேவன் ஆச்சரியமாக அசைவாடுகிறார்.
அவரது அற்புதங்களை அவர் செய்கிறார்.
அவர் தமது காலடிகளை கடலில் வைக்கிறார்.
புயலின் மீது அவர் சவாரி செய்கிறார்.

முடிவுரை

முதல் உலக மகாயுத்தம் முடிந்த போது மலாஃப் ஐக்கிய நாட்டில் அனேக பயிற்சிப் பள்ளிகளை ஏற்படுத்தினார். கிழக்கு ஐரோப்பாவில் சேவைக்காக ஆயத்தம் பண்ண வாலிப ரஷிய மாணவர்கள் வந்தனர். ரஷியாவின் மிஷனெறி இயக்கம் ஆரம்பமானது. ரஷியாவிலேயே அரசாங்கம் தூக்கியெறி யப்பட்டு பாரம்பரிய சபைகளும் உடைக்கப்பட்டன. ஆனால் சுவிசேஷம் சொல்ல சுயாதீனமில்லை. ஏனெனில் அது நாஸ்திக அரசாங்கம். தேவ பிள்ளைகள் கொல்லப்பட்டனர். ஆனால் மிஷனெறி இயக்கத்தின் மூலம் மிஷனெறிகள் நுழைக்கப்பட்டு அனேக மிஷன் நிலையங்களும், சபைகளும், லாட்வியா, எஸ்டோனியா, பல்கேரியா, ருமேனியா, போலந்து போன்ற இடங்களில் ஆரம்பமாயின. இவர்களில் மிகவும் தைரியமான சுவிசேஷகர் ஸ்டீவர்ட், "அவர்கள் எங்கும் சென்று வசனத்தைப் பிரசங்கித்தனர்." அவர்கள் பரிகசிக்கப்பட்டு, கல் எறியப்பட்டு, கொள்ளையாடப்பட்டு துன்புறுத்தப் பட்டனர். மறுபடியும் மறுபடியும் சிறையிலடைக்கப்பட்டனர். உறைந்த ஏரிகளையும் துஷ்ட மிருகங்கள் நிறைந்த காடுகளையும் குதிரைகள், பனி வண்டிகள் மூலம் கடந்து சென்றனர். ஆபத்தைத் தெரிந்தும் அவர்கள் பகைமை நிறைந்த கிராமங்களுக்குச் சென்று சுவிசேஷத்திற்காகக் கிரயம் செலுத்தினர்.

தனது சொந்த ஊரான லட் வியாவில் மலாஃப் அதிகமாக பயன் படுத்தப்பட்டார். அவர் அமெரிக்காவில் பேசிக்கொண்டிருக்கும்போது இரண் டாம் உலகமகாயுத்தம் ஆரம்பமாகி பொதுவுடைமையினர் லட்வியாவைக் கைப்பற்றினர். அவர்கள் மகிமையான எழுப்புதலை அனுபவித்துக் கொண்டி ருந்த ஆலயக் கட்டிடம் இடிக்கப் பட்டது.

மலாஃபின் சொந்த சகோதரரும் உடன் ஊழியருமானவரை சைபீரியா வுக்கு அனுப்பினர். அங்கு அவர் கொல்லப்பட்டார். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மலாஃப் நிறுவிய ரஷிய வேத புத்தக அச்சகம் இடம் மாற்றப்பட்டது. அது பின்பு ஸ்வீடனோடு இணைக்கப் பட்டது. ஐம்பது ஆண்டுகள் நல்ல சேவை செய்த மலாஃப் 1957-ல் தான் சேவித்த இரட்சகரை சென்றடைந்தார்.

கர்த்தருடைய சத்தியத்தில் நடவுங்கள்

Wait in the Lord's Truth

Rich Carmicheal

கிறிஸ்துவின் வசனத்தைக் குறித்தும், அவரைக் குறித்தும் அனேகர் அடக்கியும், திரித்தும் கூறுவதோ அல்லது நேரடியாகவே அதன் உண்மைகளை எதிர்க்கவோ செய்வதுமான ஒரு காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பதிலாக தங்கள் சொந்த அபிப்பிராயங்கள், ஆசைகள் போன்றவற்றின் அடிப்படையில் தவறான கருத்துக்களை வெளியிடுகிறார்கள். இது கவலைக்கிடமானதாயினும் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. ஏனெனில் "சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கி வைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்திற்கும் ...." ரோமர் 1:18 கூறுகிறது. மேலும் "சத்தியத்துக்கு செவியை விலக்கிக் கட்டுக்கதைகளுக்கு சாய்ந்து போகும் காலம் வரும்" 2 தீமோ.4:4-ல் பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார். விசுவாசிகளாகிய நாம் நமது கண்களைக் கர்த்தர் மேல் வைத்து முற்றிலும் அவரது சத்தியத்தில் நடப்பது அவசியம். நமது குறிக்கோளும் ஜெபமும் தாவீதைப் போலிருக்க வேண்டும். "கர்த்தாவே உமது வழியை எனக்குப் போதியும், நான் உமது சத்தியத்தில் நடப்பேன், நான் உமது நாமத்திற்குப் பயந்திருக்கும்படி என் இருதயத்தை ஒருமுகப்படுத்தும். என் தேவனாகிய ஆண்டவரே, உம்மை என் முழு இருதயத்தோடும் துதித்து உமது நாமத்தை என்றென்றைக்கும் மகிமைப்படுத்துவேன்" சங்.86:11-12.

சத்தியம் கர்த்தருக்கு மிகவும் முக்கியம் வாய்ந்தது. அவர் "சத்தியத்தின் தேவன்," அவருடைய தன்மை சத்தியத்தை மையமாகக் கொண்டது (சங்.31:5; யாத்.34:6) அவரது குமாரன் கிருபையிலும் சத்தியத்திலும் நிறைந்தவர். அவர் வழியும், சத்தியமும் ஜீவனுமானவர் (யோவா.1:14, 14:6) அவரது ஆவியானவர் சத்திய ஆவியானவர். அவர் நம்மை சகல சத்தியத்திலும் வழிநடத்துகிறவர் யோவா.16:13. அவரது வசனம் 'சத்திய வசனம்' 2 தீமோ.2:15. உம்முடைய வசனம் சமூலமும் சத்தியம் சங்.119:160.

கர்த்தர் யார் என்பதற்கு மையமாயிருப்பது சத்தியம். அவர் நம்முடைய இருதயங்களை சத்தியத்தினால் நிரப்பும்படி விரும்புகிறார். 1 தீமோ.2:4-ன்படி "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும் சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்." நமது உள்ளத்தில் உண்மை இருப்பது அவரது விருப்பம் 3 யோவா.1:4. கர்த்தருக்குப் பயந்து அவரை உண்மையாய் சேவிக்கிறவர்களை அவர் தேடுகிறார். அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் அவரை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ள வேண்டும் யோவா.4:23. சத்தியத்தை அன்புடன் பேசும்படி நாம் அழைக்கப்படுகிறோம் எபே.6:15. "பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியினிடத்தில் வராதிருக்கிறான். சத்தியத்தின்படி செய்கிறவனோ ஒளியினிடத்தில் வருகிறான்" யோ.3:20,21. தீங்கு நாளில் நாம் சத்தியம் என்னும் அரைக்கச்சையைக் கட்டிக்கொள்ள வேண்டும். எபே.6:13, 14. அவருடைய வீட்டாருடன் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாகிய நாம் சத்தியத்திற்குத் தூண்களும், அஸ்திபாரமுமாயிருக்கிறோம்..

தேவனுடைய சத்தியம் பூரணமானதும் மாறாததுமாகும்

தேவன் இருக்கிறவராகவே இருப்பவர் - நித்தியமானவர் - உண்டாக்கப்படாதவர் - சர்வ வல்லவர் - சர்வ வியாபி - மாறாதவர். எனவே அவரைக் குறித்தும், அவரது வசனத்தைக் குறித்தும் கூறப்படும் சத்தியங்களும் மாறாதவை. அவரைக் குறித்த உண்மை யாது? "நான் கர்த்தர், நான் மாறாதவர்" மல்கி.3:6. புல் உலர்ந்து பூ உதிரும், நமது தேவனுடைய வசனமோ என்றென்றைக்கும் நிற்கும் ஏசா.40:8. அவர் சிருஷ்டிகர். எனவே எல்லாவற்றைக் குறித்த ஆரம்பமும் முடிவும் அவருக்குத் தெரியும். அவரே எது சரி, எது தவறு என்றும் எது நலம் எது தீமை என்றும் தீர்மானிக்கிறவர். மனிதன் இதற்கு எதிராக செயல்படலாம். ஆனால் முடிவில் அவரது வசனத்தையும் அவரையும் எதிர்க்கிறவர்களை அவரது வசனம் நியாயம் தீர்க்கும்.

கடுமையான விளைவுகள்

மேற்கூறிய வசனங்களின் வெளிச்சத்தில் நாம் பார்க்கும்போது தேவனுடைய சத்தியத்தை ஒப்புக்கொள்ளாமலும் அதன்படி நடக்காமலுமிருக்கிறவர்களின் நிலை என்ன, தேவனுடைய சத்தியத்தை விட்டு விலகிப் போகிறவர்களுக்கு வரும் தீமையைக் குறித்து ரோமாபுரியாருக்குப் பவுல் அப்போஸ்தலன் எழுதிய வசனங்களை ரோமர்.1:18, 25, 28 ஆகிய வசனங்களில் படித்துப் பாருங்கள்.

நமக்கும் இது ஒரு அழைப்பாக இருக்கிறது. நாம் அதிக தேவபயமுடையவர்களாயிருக்கவும், அவருடைய வசனத்திற்கு அதிகமாய் அர்ப்பணிக்கவும், அவருடைய சத்தியத்திலிருந்து நம்மைப் பிரிக்கும் உலகத்திலிருந்து நம்மை விலக்கிக் கொள்ளவும் அழைக்கப்படுகிறோம். பெரும்பான்மை மக்கள் ஒருபோதும் சரியாயிருக்கவில்லை என்பது சரித்திரம். நோவாவின் காலத்திலும் இப்படியேயிருந்தது. நோவாவும் அவனுடைய குடும்பத்தாரும் மட்டுமே சரியானதைச் செய்தார்கள். ஒரு மனிதனாயிருந்தாலும் சரியானதற்காக உறுதியாக நிற்பதை சர்வவல்லவர் எதிர்பார்க்கிறார். நமது ஆண்டவராகிய இயேசுவின் வசனத்தின்படி "இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள். கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும் வழி விசாலமுமாயிருக்கிறது. அதன் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அனேகர்" மத் 7:13.

இந்த செய்தி நீங்கள் உங்களை தேவனுக்கு அர்ப்பணிக்கவும், தேவ பயத்தையும், சத்தியத்தின் மீதுள்ள நம்பிக்கையை வளரச்செய்யவும் உதவுமென நம்புகிறோம். தவறுகளும், ஏமாற்றங்களும் நிறைந்த இந்த நாட்களில் தேவனுடைய வசனத்தைப் பற்றிக் கொண்டு நலமான பாதையில் செல்ல முயற்சிப்போம்.

சத்தியத்திற்காக உறுதியாக நிற்கவும், அன்புடன் சத்தியத்தைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளவும் முயற்சிப்போம் எபேசி.4:15. இந்தப் பணி கூடாதென்று எண்ண வேண்டாம். ஏனெனில் தேவன் ஆவியானவரைக் கொண்டு மனிதர் சத்தியத்தை அறிந்துகொள்ள நடத்துவார். இந்த சத்தியத்தை நமது பிள்ளைகளுக்கும் அவர்களது பிள்ளைகளுக்கும் அறிவிப்போம். கொஞ்சத்தப்பட்ட ஒரு விளக்கு இன்னொரு விளக்கை எரியச் செய்வது போல பிறரை எரியச் செய்வோம்.

Registered with the Registrar of News Paper For India under R.N.I. TN TAM 11967/'67
Date of Publication : 27th of Every month

If un-delivered please return to:
VARUKAYIN THOOTHAN
Nagercoil - 629 001. INDIA.
Mobile: 9543221008

Book Packets contains periodicals

To

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason